நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, சாத்தூர்.

சி.சி.எண். 75/2022

பெயர் – சுந்தரமூர்த்தி (PW2)

நாள் – 02.05.2023

மனு அனுமதிக்கப்பட்டதன் பேரிலும் சத்திய பிரமாணத்தின் பேரிலும் செய்யப்பட்ட கு.வி.

நான் எவ்வளவு காலமாக டிரைவராக உள்ளேன் என்றால் 16 வருடங்களாக டிரைவாக உள்ளேன். சாலை விதிகள்,மற்றும் மோட்டார் வாகன விதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் 11.8.2023 ம் தேதியன்று புளியங்குடியில் இருந்து 8.00 மணியளவில் கிழம்பு திருவேங்கடம் – கோவில்பட்டி ரோட்டில் உள்ள சிப்பிப்பாறை சனீஸ்வரன் கோவில் அருகே வாகன விபத்து ஏற்பட்ட இடத்திற்கு இரவு 10.30 மணிக்கு வந்தடைந்தேன். எனது வாகனத்தில் எத்தனை பேர்கள் பயணித்தார்கள் என்றால் 19 பேர்கள் பயணித்தார்கள். இரவு நேரம் என்பதால் எனது வாகனத்தில் பயணித்தவர்கள் தூங்கிவிட்டார்கள் என்றால் பாதி பேர்கள் தூங்கிவிட்டார்கள். மற்றவர்கள் முழித்திருந்தார்கள். சின்ன குழந்தைகள் தூங்கிவிட்டார்கள். நான் ஓட்டி வந்த டாடா ஏசி வாகனத்தில் ஓட்டுனர் இடமும், பயணிகள் பயணிக்கும் இடமும் தனி தனியாக இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு வரும்போது யார் தூங்கி கொண்டு இருந்தார்கள், யார் முழிந்திருந்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். எனது டாடா ஏசி வாகனத்தில் ஆட்கள் ஏற்றிவருவதற்கு அனுமதி கிடையாது என்ாறல் சரிதான். அவ்வாறு ஆட்களை ஏற்றிவரக்கூடாத வாகனத்தில் ஆட்களை ஏற்றிவந்தால் அதற்கு அந்த வாகனத்தின் ஓட்டுனரும், உரிமையாளுரும் தான் பொறுப்பு என்றால் சரிதான். எனது வாகனத்தில் கோவிலுக்கு செல்வதாக போட்டோ வைத்து லைட் போட்டு வந்தோமா என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் எனது வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்திய வாகன ஓட்டுனரை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகன ஓட்டுனரின் பெயர் மற்றும் விவரத்தை போலிசார் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது வாகனமும், விபத்து ஏற்படுத்திய வாகனமும் நேருக்கு நேராக மோதிக் கொண்டதா என்றால் நேருக்கு நேராக வலது பக்கம் முழுவதுமாக மோதி எனது

வாகனம் இடது பக்க தடுப்பு சுவற்றில் விழுந்துவிட்டது. எனது வாகனத்தில் எவ்வவு எடை வரை ஏற்றலாம் என்றால் 750 கிலோ வரை ஏற்றலாம். அன்றைய தினம் நான் கூடுதலாகத்தான் எடை ஏற்றி இருந்தேன் என்றால் இருக்காது. குழந்தைகள் இருந்தார்கள். சட்டத்திற்கு புறம்பாக எனது கனரக வாகனத்தில் ஆட்களை ஏற்றிவந்து நான்தான் விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றாலும் அந்த விபத்திற்கு நான் தான் காரணம் என்றால் சரியல்ல. நான் போய் மோதவில்லை. மோட்டார் வாகன விதிப்படி இரவு நேரங்களில் ஹாரன் அடிக்கமுடியாது என்றாலும் ஒளி விளக்கை தான் இயக்க முடியும் என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.75/2022 |
| Preliminary Register | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw4 |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name : மணிகண்டன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.05.2023

நான் தற்பொழுது புளியங்குடியில் வசித்து வருகிறேன். நான் வெல்டிங் செய்யும் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன கிருஷ்ணலீலாவதி எனது மனைவி. வழக்கில் இறந்து போன சிறுவன் கபிலேஷ்குமார் எனது ஊரைச்சேர்ந்தவர் ஆவார். 9.8.2022 ம் நான் பாதயாத்திரையாக இருக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்கு சென்று உள்ளேன். ஈஸ்வரன் என்ற ஒரு நபர் எனக்கு போன் செய்து 11.8.2022 ம் தேதி

சிப்பிப்பாறை அருகே எனது மனைவி மற்றும் 19 நபர்கள் சென்ற டாடா ஏசியின் வாகனம் விபத்துக்குண்டானது என்று சொன்னார். அந்த டாடா ஏசி மீது ஒரு லாரி மோதி விபத்து ஏற்படுத்தியதாக சொன்னார். என்னை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு வரச்சொன்னார்கள். நான் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தேன் அங்கு விபத்தில் இறந்த எனது மனைவியின் பிரேதத்தை பார்த்தேன். எனது மகன் மதுரேசனுக்கு வலது காலில் காயம் ஏற்பட்டு கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் இருந்து திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். மொத்தம் 19 நபர்களுக்கு காயம் ஏற்பட்டு இருந்தது. பின்னர் பிரேத பரிசோதனை முடிந்து எனது மனைவியின் உடலை பெற்றுக் கொண்டேன். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். என் மனைவி இறப்பிற்காக மோட்டார் வாகன விபத்து நஷ்டஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மோட்டார் வாகன விபத்து நஷ்டஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய் துள்ளதால் அதிகமான நஷ்டஈடு கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் இந்த வழக்கிற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.